ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2497/51 - 2026 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2026.07.17

2497/51 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: KES/DS/LND/AC/4/12.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4/3/9/2017/WS/304.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

தேவையான பொதுப் பணி : களுகங்கை நீர் வழங்கல் செயற்திட்டத்தின் II ஆவது கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் கஸ்பேவ நிலக்கீழ் நீர்த்தேக்கத்திற்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக வழியுரிமையை எடுத்துக் கொள்ளல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில் கஸ்பேவ தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள 572A, கஸ்பேவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நிலப்பரப்பு வரைபட இலக்கம் 521205 இன் வலய இலக்கம் 02, பத்திர இலக்கம் 1 இன் துண்டு இலக்கம் 01 இனால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்திலிருந்து 0.0434 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

01. துண்டு இல. 01
காணியின் பெயர்: மாரகஹவத்த; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை ஒன்று உள்ளது; உரிமை கோருவோர்: இலக்கம் 69, ஶ்ரீ



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தேவானந்த வீதி, தும்போவில, பிலியந்தலையில் வசிக்கும் ஐ. ஏ. என். றுவன் பெரேரா; விஸ்தீரணம்: 0.0434 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு கஸ்பேவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இஷங்கா டி. கே. உடவத்த,
பிரதேச செயலாளர்,
கஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கஸ்பேவ,
2026, யூன் 09.

EOG 07 - 0206

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/YNU/4/1/LDE/377/B.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 05/LD/05/2009/97.

மேற்குறிப்பிட்ட தலையங்கத்தின் கீழ், 27.04.2016 ஆந் திகதிய 1964/24 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் படியான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கண்டி மாவட்டத்தில், யட்டிநுவர பிரதேச வருமான அலுவலர் பிரிவில், உட ஈரியகம கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப வரைபட இல. மஹா 6299 இல் துண்டு இல. 118 ஐக் கொண்டுள்ள காணி, துண்டு இல. 131 மற்றும் 132 எனத் திருத்தப்பட்டு மற்றும் துண்டு இல. 131 இன் விஸ்தீரணம் 0.0012 ஹெக்டயார் எனவும் மற்றும் துண்டு இல. 132 இன் விஸ்தீரணம் 0.0013 ஹெக்டயார் எனவும் திருத்தம் செய்யப்படுகின்றது.

எஸ். எம். சீ. குணரத்ன,
பிரதேச செயலாளர்,
யட்டிநுவர.

பிரதேச செயலகம்,
யட்டிநுவர,

EOG 07 - 0207

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.